ஸ்ரீ:



ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# 18. பெரிய சடகோப ராமானுஜ ஸ்வாமி

## தனியன்

வித்$_3$யாஜ்ஞாந ஸுப்ருக்த மங்க$_3$ளகு$_3$ணை: பூர்ணஸ்ய கோ$_3$ப்துஸ்ஸதா$_3$
பாதா$_3$ப்$_3$ஜே ஸுதராம் நிவிஷ்டஹ்ருத$_3$யம் வாநாத்$_3$ரி யோகீ$_3$ஸிது: |
வேதா$_3$ந்த த்$_3$வயபாரகம் ஸுப$_4$கு$_3$ணைர்ஜுஷ்$_2$டம் ஸுஸீலாந்விதம்
வந்தே$_3$ லக்ஷ்மண யோகி$_3$வர்யம் அமலம் வாநாசலேஷ$_2$ ப்ரியம் ||

## வாழி திருநாமம்

வரமங்கை மாநகரில் வந்துதித்தோன் வாழியே
வாழ் திருவேங்கட முனிவன் மலரடியோன் வாழியே
சிரமங்கை வைத்தவர் தாம் சேர் பதத்தோன் வாழியே
தெய்வநாயகன் செல்வம் திருத்தி வைப்போன் வாழியே
கருணையினால் உபதேசக் கதி அளிப்போன் வாழியே
காரிமாறன் தமிழின் கருத்துரைப்போன் வாழியே
சரணாகதி தன்னைத் தந்தருள்வோன் வாழியே
சடகோப மாமுனிவன் தாளிணைகள் வாழியே

மங்குல் தவழ் பொழில் மங்கை வாழ வந்தோன் வாழியே
மால் கூரத்தாழ்வான் தன் மலரடியோன் வாழியே
பொங்கிய செந்தமிழ் மறையின் பொருள் உரைப்போன் வாழியே
புரட்டாசி அசுவதியில் பொலிந்துதித்தான் வாழியே
செங்கமல மாமாதின் சீர் தழைத்தோன் வாழியே
திருவேங்கட முனியைச் சிந்தை செய்வோன் வாழியே
தங்கும் அடியார்க்கு ஆழி சங்கருள்வோன் வாழியே
சடகோப வரமுனிவன் தாளிணைகள் வாழியே

சீர் மருவும் செங்கமலச் சேவடிகள் வாழியே
செம்பொன் எழில் சேலை அமர் திருவரையும் வாழியே
ஏர் மருவும் திருமார்பும் புரிநூலும் வாழியே
எழில் கை அமர் முக்கோலும் இருதோளும் வாழியே
பார் புகழும் பாஷியத்தைப் பகர் பவளம் வாழியே
பங்கயக் கண்ணினை அழகும் பல்லாண்டு வாழியே
தார் புனையும் திருமுடியும் திருமுகமும் வாழியே
சடகோப மாமுனிவன் தாளிணைகள் வாழியே

## சீர்

வாழி சடகோப மாமுனிவன் தாமரைத் தாள்
வாழி அவன் செம்பவள வாய் மொழிகள் - வாழியே
திருவேங்கட முனி சீர் அருளால் மாறன்
திருவாய்மொழி உரைக்கும் சீர்